# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1923/69 - 2015 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2015.07.17

*1923/69 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் கண்டி மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*இராஜினாமா செய்தமை காரணமாக கண்டி மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*நெரன்ஜன் பிரியதர்ஷன விஜயரத்ன என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் கண்டி மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. மொஹொமட் முத்தாலிப் ஷிராஜ் ஹசன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;*

*இப்போது கண்டி மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புஹாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மொஹொமட் முத்தாலிப் ஷிராஜ் ஹசன் என்பவர் கண்டி மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*டி.ஏ. சீ. என். தலங்கம,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*கண்டி மாநகர சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*கண்டி,*
*2015, யூலை 14.*

*7 - 1560*




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*